### வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில்

# எலும்பு தேய்மான நோய்க்கு சிகிச்சை அளிக்க நவீன வசதி

வேலூர், அக்.11–
எலும்பு தேய்மான நோய் மற்றும் இந்த நோயால் ஏற்படும் எலும்பு முறிவுகளை கண்டறியும் வகையிலான டிஸ்கவரி–னிஞ்ஸி என்ற அதி நவீன டெக்ஸா ஸ்கேன் கருவி தொடக்க விழா வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் டாக்டர் தாமஸ்பால் வரவேற்றுப் பேசினார். ஆஸ்பத்திரியில் மெடிக்கல் .சூப்பிரண்டு லயனல் ஞானராஜ் ரிப்பன் வெட்டி அதி நவீன கருவியை தொடங்கிவைத்தார். இயக்குனர் சுரஞ்சன் பட்டாச்சார்யா குத்துவிளக்கேற்றினார்.

டாக்டர் ஷேசாத்திரி நவீன கருவி குறித்து விளக்கி பேசினார். அவர் பேசும்போது, 'ஒஸ்டியோபோரொசிஸ்' என்னும் எலும்பு தேய்மான நோய் மாதவிடாய் நின்ற பெண்களில் 50 சதவீதம் பேருக்கு காணப்படுகிறது. இதற்கான கருவி கடந்த 2001–ம் ஆண்டு முதல் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் பயன்படுத்துப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது தொடங்கப்பட்டுள்ள நவீன கருவியைப் போன்ற சிறப்பு தன்மை அதில் கிடையாது

எலும்பு தேய்மான நோயால் இரும்பு எலும்பு, முதுகு எலும்பு மற்றும் கை எலும்பு ஆகியவற்றில் முறிவு ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இந்த எலும்பு முறிவை பழைய கருவியில் கண்டறிய முடியாது. ஆனால் தற்போது உள்ள அதி நவீன கருவியில் எலும்பு முறிவு, எலும்பின் அடர்த்தி எந்த அளவு தேய்ந்துள்ளது என்பது முதல் துல்லியமாக கணிக்க முடியும்.

மேற்கண்வாறு டாக்டர் ஷேசாத்திரி கூறினார்.

நிகழ்ச்சியில் டாக்டர் மல்சியா ஜோசுவா உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் டாக்டர் தாமஸ்பால் நன்றி கூறினார்.

DINATHANTHI DT.
OCTOBER 11, 2008